**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

**முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை**

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.16/2025 (CNR.No.TNMD240002552025)</u>**

1) அன்னத்தாய்
2) செல்வம்
3) மகாலட்சுமி ......மேல்முறையீட்டாளர்கள் / வாதிகள்

–எதிர்–

1) பாப்பு
2) கருப்பு
3) தங்கப்பாண்டி
4) தெய்வம் ..... எதிர்மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடானது, உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற அசல் வழக்கு எண். 02 / 2016, வழக்கில் கடந்த 03.04.2025 தேதியில், பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதலேற்பு வழக்கு எண். 02 / 2016</u>

1) அன்னத்தாய்
2) செல்வம்
3) மகாலட்சுமி ......வாதி

–எதிர்–

1) பாப்பு
2) கருப்பு
3) தங்கப்பாண்டி
4) தெய்வம் .....பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 05.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பி.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஏ.ஜே.வினோதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இரு தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் மேல்முறையீட்டிற்குண்டான காரணங்களும், படித்து பார்க்கப்பட்டும், இது நாள் வரை, இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

<u>**தீ ர் ப் பு ரை**</u>

**2)** இந்த மேல்முறையீடானது, உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற அசல் வழக்கு எண். 02 / 2016 வழக்கில் கடந்த 03.04.2025 தேதியில்

பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மேற்படி அசல் வழக்கானது, வழக்கு சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ எவ்வித அத்துமீறல்களும், தடை இடைஞ்சல்களும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகைகளைப் பிரதிவாதிகள் வாதிகளுக்கு கொடுக்க கோரியும், வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**4) வழக்குரைச்சுருக்கம்:**

i) தாவாச் சொத்து உசிலம்பட்டி தாலுகா, நக்கலபட்டி கிராமம் முத்துப்பாண்டிபட்டியில் அமைந்துள்ளது. மேற்படி கிராமத்திலிருக்கும் கலியாணித்தேவர் மனைவி மீனாட்சிக்கு பாத்தியப்பட்ட அயன்புஞ்சை ரீ–சர்வே 391/3B–ல் ஹெக்டேர் 0.12.0–க்கு செண்டு 30 ஆகும். 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். மீனாட்சி என்பவரிடம் சர்வே எண்.391/3B–ல் ஹெக்டேர் 0.12.0–க்கு செண்டு 30–க்கு கீழ்புறம் செண்டு 15–ஐ கடந்த 08.09.1993–ம் தேதி 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் செய்து கொண்டுள்ளார்கள். தாவாச் சொத்தைக் கடந்த 10.07.1994–ம் தேதி 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டு, தாவாச் சொத்தில் வாதிக்கு கீழ்புறம் 7–1/2 செண்டும், 1–ம்

பிரதிவாதிக்கு மேல்புறம் 7–1/2 செண்டும் பாகமாக அனுபவித்து வருகிறார்கள்.

ii) தாவாச் சொத்தில் வாதிகள் கடந்த 1994–ம் தேதி அவர்களுக்கு கிடைத்த பாகத்தின் மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள A, B, E, F மேல்புறத்தில் கிழமேலாக 16 அடியிலும், தென்வடலாக 45 அடியிலும் மூன்று வீடுகள் அமைத்தும், வீடுகளுக்கு கீழ்புறம், வடபுறம் காலியிடமாகவும் அனுபவம் செய்து வருகிறார்கள். வாதிகள் கட்டியுள்ள மூன்று வீட்டில் 1 முதல் 3 வரையுள்ள வாதிகள் தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள். தாவாச் சொத்தில் வாதிகள் வீடு கட்டி குடியிருந்து வரும் வீட்டிற்கு கடந்த 16.09.1994–ம் தேதி 1–ம் வாதியின் கணவர் அ.ஆங்கத்தேவர் பெயரில் மின்இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார்கள். தாவாச் சொத்தில் பிரதிவாதிகள் C, D, E, F காண்பிக்கப்படும் மாதிரி வரைபடம், மேல்புறம், கீழ்புறம் காலியிடமாகவும், மேல்புறத்தில் தென்புறம் வீடுகட்டியும் இருந்து வருகிறார்கள். வாதிகளுக்கு பாகமாக கிடைத்த A, B, E, F–ல் கிழமேலாக 16 அடியும், தென்வடலாக 45 அடியில் கட்டியுள்ள வீடும் பழுதடைந்த நிலையில், அதில் வாதிகள் குடியிருந்து வருகிறார்கள்.

iii) அடுத்ததாக, வாதி வீட்டை மராமத்து வேலை பார்த்த போது பிரதிவாதிகள் வாதியின் வீட்டை குறைந்த விலைக்கு கேட்டுள்ளார்கள். அதற்கு வாதிகள் மறுக்கவே வீட்டை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 20.12.2015–ம் தேதி பிரதிவாதிகள் வாதிகளை வேலை செய்யவிடாமல் அடியாட்களுடன் வந்து தடுத்து வாதிகளின் அமைதியான அனுபவத்தில் உள்ள வீட்டையும்,

காலியிடத்தையும் தடுக்கும் எண்ணத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய முயன்றவர்களை வாதிகள் அவர்களது உறவினர்கள் மூலம் பிரதிவாதிகளின் சட்டவிரோத செயலைத் தடுத்துள்ளார்கள். இருப்பினும் மீண்டும் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய உட்படுவார்கள் என்பதால் வாதிகள் தாவா வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

**5) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

i) வாதிகள் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளில் பிரதிவாதியால் தரப்பில் ஒப்புக்கொள்ளும் சங்கதி தவிர மற்ற சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். 1–ம் வாதியும், 1–ம் பிரதிவா–தியும் கிரையம் பெற்ற பின்பு வாய்மொழியாக செய்து கொண்ட பாகத்தின் படி கிழமேல் மொத்தம் 72.3 அடி ஆகும். இதில் பொதுவாக செய்து கொண்ட பாகத்தின்படி தென்வடலாக 10 அடி உயரத்தில் 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து பொது சுவர் ஒன்று எடுத்துக்கொண்டுள்ளார்–கள். இதில் 1–ம் வாதிக்கு சுவற்றிலிருந்து கிழக்கு பக்கம் 38.3 அடியும், தென்வடல் 92 அடியும் பாகம் கிடைத்து, அதில் 1–ம் வாதி 10–அடி உள்ள தென்வடல் பொது சுவற்றில் கீழ்பக்கம் மேற்படி சுவற்றை மையமாக வைத்து மேல்புறம் சுவர் எடுக்காமல் கீழ்புறம் வீடு கட்டிக்கொண்டுள்ளார். அதேபோல், 1–ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பட்ட 10–அடி உயரமுள்ள தென்வடல் பொதுசுவற்றிலிருந்து மேல்புறம் அவருக்கு பாகமாக கிடைத்த 34–அடியும், தென்வடலாக கிடைத்த 92 அடியையும் பயன்ப–டுத்திக்கொண்டு மேற்படி சுவற்றிற்கு மேல்புறம் ஆடு, மாடு கொட்டகை–

யாக பயன்படுத்தியும், 10–அடி தென்வடல் பொதுசுவற்றில் மேல்புறம் ஆடு, மாடு கட்டியும் கொட்டகை அமைத்தும், வீடு கட்டியும் குடியிருந்து வருகிறார்கள். வாதிகள் 10–அடி உயரமுள்ள பொது சுவற்றின் பொது பயன்பாட்டையும், 1–ம் வாதிக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் அவரவருக்கு கிடைக்கப்பெற்ற மொத்த அடியையும் தனியாக சொல்லாமல் பொது சுவற்றை வாதிகள் சொந்தம் கொண்டாடுவதற்காக உண்மையை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

ii) A, B, E, F மேல்புறத்தில் கிழமேலாக 16–அடியும், தென்வடலாக 45 அடியும், மூன்று வீடுகள் அமைத்தும் கீழ்புறம், வடபுறம் காலியிடமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது பொய்யானது ஆகும். வாதிகள் கீழ்புறம் வடபுறம் எத்தனை அடி காலியிடமாக அனுபவம் செய்து வருகி–றார்கள் என்பதை வேண்டுமென்றே மறைத்து வழக்கு முரண்பாட்டுடன் தாக்கல் செய்துள்ளார்கள். கடந்த 27.12.2015 அன்று வாதிகள் தென் வடலாக உள்ள 10 அடி பொதுசுவற்றை தெற்கு பக்கம் இடிக்க வேண்டும் என்றும், இடித்தால்தான் தனது சகோதரன் உயிர் பிழைப்பான் என்று ஜோதிடர் சொன்னதாகவும், அதனால் மேற்படி சுவற்றின் மையப்பகுதி–யை வாதிகள் சுவற்றை இடித்துள்ளார்கள். இது சம்பந்தமாக உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் 27.12.2015 அன்று 2–ம் வாதி மீது புகார் கொடுத்து ம.எண்.484/15 ரசீது கொடுத்து பொது சுவற்றை இடிக்கக் கூடாது என்றும், வேண்டுமென்றால் 1x1 சதுரடியுள்ள அளவிற்கு ஜன்னல் அமைத்துக்கொள்ளட்டும் என்று சொல்லி எழுதி வாங்கியும் எச்சரித்தும் 2–ம் வாதியை அனுப்பிவிட்டார்கள் என்றும், இதனால் கோபமுற்ற வாதிகள் வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளார்கள். A, B, E,

F–ல் கிழமேலாக கிடைத்த 16–அடியும், தென்வடலாக 45–அடியில் கட்டியுள்ள வீடும் பழுதடைந்த நிலையில் குடியிருந்து வருகிறார்கள் என்பதையும், பிரதிவாதிகள் வாதியின் வீட்டைக் குறைந்த விலைக்கு கேட்டு வாதிகள் மறுக்கவே வீட்டை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 20.12.2015–ம் தேதி பிரதிவாதிகள் வாதிகளை வேலை செய்யவிடாமல் அடியாட்களுடன் வந்து தடுத்தார் என்பதையும், வாதிகளின் அமைதியான அனுபவத்தில் உள்ள வீட்டையும் காலியிடத்தையும் தடுக்கும் எண்ணத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய முயன்றவர்களை வாதிகள் உறவினர் மூலம் பிரதிவாதிகளின் சட்ட விரோத செயலைத் தடுத்துள்ளார்கள் என்பதையும் வாதிகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். தாவா வழக்கின் சொத்து விபரமும், வழக்கு மூலமும் தவறானது ஆகும். தாவா வழக்கிற்கு வாதி சொல்லியுள்ள முத்திரைக் கட்டணம் தவறானது ஆகும். வாதிகளின் வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது.

**6)** மேற்கூறிய, வழக்குரை, எதிர்வழக்குரை, ஆவணங்கள் மற்றும் இரு தரப்பு வழக்குரைஞர்களின் வாதங்களின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம், இவ்வழக்கில், தீர்வுக்காக, கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்திருக்கிறது.

i) வாதிகள் கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

ii) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**7)** மேற்கூறிய எழுவினாக்களிலிருந்து, வாதிகளின் வழக்கினை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, அவர்களுக்கே இருந்ததால், சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் 2–ம் வாதி செல்வம் என்பவர் வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1–ன் மூலமாக வா.சா.ஆ.–1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் 3–ம் பிரதிவாதி தங்கபாண்டி என்பவர் பி.வா.சா.1–ஆக விசாரணை செய்யப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட்டவில்லை.

**8)** விசாரணை நீதிமன்றம், முழு விசாரணைக்குப்பின்னர், அசல் வழக்கு எண்.02/2016–ஐ, கடந்த 03.04.2025–ம் தேதியில், முழுவதும் தள்ளுபடி செய்து பிறப்புவித்திருக்கிற தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில், குறையுற்ற, வாதிகளால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**<u>9) மேல்முறையீட்டு குறிப்பாணையின் சுருக்கம்:–</u>**

மேல்முறையீட்டாளர்கள் தாவா அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். தாவா அசல் வழக்கானது, வழக்கிடைச் சொத்து, வாதிகளின் அனுபவத்தில் உள்ளது. பிரதிவாதியோ, அவரது ஆட்களோ வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். விசாரணை நீதிமன்றம் வாதி தரப்பு சான்றாணங்கள் மற்றும் சாட்சியங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்தது ஒருதலைப்பட்சமானது ஆகும். விசாரணை நீதிமன்றம் உபயதரப்பினர்கள் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை

பரிசீலனை செய்யவில்லை. சர்வே எண். 391/3B–ல் உள்ள செண்ட் 30 மீனாட்சிக்கு பாத்தியப்பட்டதாகும். 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரிகள் என்பதால் மீனாட்சி என்பவரிடமிருந்து மேற்படி 30 செண்டில் கீழ்புறம் 15 செண்டை கடந்த 08.09.1993–ல் 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் பெற்றனர். மேற்படி, 15 செண்டில் தலா 7 1/2 செண்ட் என இருவரும் பிரித்துக்கொண்டனர். அவ்வாறு பிரித்துக்கொண்டதில் 7 1/2 செண்ட் 1–ம் வாதியும், 7 1/2 செண்ட் 1–ம் பிரதிவாதியும் தனித்தனியாக அனுபம் செய்து வருகிறார்கள். அதன் அடிப்படையில் இருவரும் சேர்ந்து 71/2–க்கு நடுவே ஒரு பொது சுவர் எழுப்ப ஒப்புக்கொண்டார்கள். அதன் அடிப்படையில், 10 அடி உயரத்திற்கு பொது சுவர் எழுப்பி வாதி அமைதியாக அனுபவம் செய்து வருகிறார். ஆகவே, வழக்கிடைச் சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருக்கிறது என்பதை வாதிகள் விசாரணை நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தியும், விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்தது சட்டத்திற்கு புறம்பானது ஆகும். எனவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர்களால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இம்மேல்முறையீட்டு வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்ற அசல் வழக்கு எண். 02 / 2016

வழக்கில் கடந்த 03.04.2025 தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>11) பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

i) முதலாவதாக, விசாரணை நீதிமன்றத்தில் 2–ம் வாதி வா.சா.1–ஆக சாட்சியம் அளித்தார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், 1–ம் வாதி தன்னுடைய தாயார் என்றும், 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து தாவா சொத்தை கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை வா.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்தார். அதனை பரிசீலனை செய்யும் பொழுது, இருவரும் சேர்ந்து பொதுவாக, சர்வே எண். 391/3பி–ல் கீழ்புறமாக செண்ட் 15–ஐ கிரையம் பெற்றதாக கண்டுள்ளது. வாதிகளின் வழக்கானது, 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் மேற்படி 15 செண்டை தலா 7 1/2 செண்ட் வீதம் பிரித்துக்கொண்டார்கள் என்பதாகும். மேலும், மேற்படி 15 செண்டை 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் எந்த தேதியில் பிரித்துக்கொண்டார்கள், அதன் அடிப்படையில் இருவருக்கும் எப்போது தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டது என்ற விபரத்தினை வழக்குரையில் குறிப்பிடவில்லை. இதுசம்பந்தமாக, கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞர் வாதியை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **" இருவரும் சேர்ந்து 15 செண்டு கிரையம் வாங்கினார்கள். கிரையம் வாங்கிய நாள் முதல் நாங்கள் கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. ஆளுக்கு தலா 7 1/2 செண்டினை**

**அனுபவம் செய்து வருகிறோம். நாங்கள் ஆளுக்கு சரிபாதியாக பிரித்துக்கொண்டோம்............நாங்கள் எனது தாயார் பெயரில் தனிப்பட்டா எதுவும் வழக்கில் தாக்கல் செய்துள்ளளோமா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை** என வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும் பொழுது, வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் அடிப்படையில் 1–ம் வாதியும், 1–ம் பிரதிவாதியும் எப்பொழுது தலா 7 1/2 செண்ட் வீதம் பிரித்தார்கள் என்பது வா.சா.1–க்கு தெரியவில்லை. இதுசம்பந்தமாக, பட்டா வழங்கப்பட்டதும் தெரியவில்லை.

ii) அடுத்ததாக, தாவா வழக்கில் 3–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சித்தில் 1–ம் வாதி தன்னுடைய தாயார் என்றும், பொது சுவற்றை அனுபவிப்பது சம்பந்தமாக தங்களுக்குள் பிரச்சனை இருக்கிறது என்றும், ஆகையால், வாதி கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். இதுசம்பந்தமாக, கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்குரைஞர் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, பி.வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **7 1/2, 7 1/2 செண்டுக்கு நடுவே இரண்டு பேருக்கு இடையில் பொதுவாக 10 அடி சுவர் இருப்பதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை** என சாட்சியம் அளித்திருக்கிறார். ஆக, இருவரும் தலா 7 1/2 செண்ட் வீதம் பிரித்துக்கொண்டதால் பொது சுவரானது இருவருக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் கட்டப்பட்டதா? என்பதைப் பொறுத்து வாதி தெளிவுபடுத்த

வேண்டும். மேற்படி சுவர் வாதி இடத்தில் கட்டப்பட்டிருந்தால் மட்டுமே முழுமையாக வாதி, மேற்படி சுவரை அனுபவிக்க முடியும். தாவா வழக்கில் வாதிகள் வழக்கிடைச் சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யவில்லை. தாவா வழக்கிடைச் சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தயார் செய்தால் தான் பிரச்சனைக்குரிய சுவர்பகுதி யாருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க முடியும். கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்குரைஞர் பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, வழக்கிடை சொத்தை பார்வையிட பிரதிவாதி நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யவில்லை என்று தான் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு இருக்கிறார். வழக்குபோட்ட வாதி தான் தன்னுடைய வழக்கை தெளிவுபடுத்த வேண்டும். ஆகையால் தான் விசாரணை நீதிமன்றம் மாதிரி வரைபடத்தைக் கொண்டு வழக்கிடைச் சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருப்பதாக தீர்மானித்து உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது என தீர்மானித்து வாதியின் வழக்கை தள்ளுபடி செய்தது ஏற்புடையது ஆகும். ஆக, மேல்முறையீட்டாளர்கள் இந்த மேல்முறையீட்டில் அடையும் குறைபாடு ஏற்புடையது அல்ல. ஆகையால், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை . எனவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கு எண்.02/2026–ல் கடந்த 03.04.2025–ம் தேதியில், பிறப்புவித்திருக்கிற தீர்ப்புரையும் மற்றும் தீர்ப்பாணையும் இதன்மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு, இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இம்மேல்முறையீட்டின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை ஏதுமில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து– தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ஆம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.12 17:20:40 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர்கள் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–**

––––இல்லை––––

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.12 17:20:48 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**<u>நகல் :</u>**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

A.S.No. 16 /20225

சீரான தீர்ப்புரை

12.03.2026